

# 16

# நம்பிக்கை நாணயம் பேணுவோம்

இப்பிரபஞ்சத்தில் அமைதி, ஒற்றுமை, அன்பு, பரஸ்பர புரிந்துணர்வு போன்றன நிலைத்திருக்க வேண்டுமாயின் மனிதர்கள் மத்தியில் நற்குணங்கள் பேணப்பட வேண்டும். ஒரு சமூகம் அல்லது ஒரு தேசத்தின் எழுச்சிக்கு நற்பண்புகள் இன்றியமையாதவை. ஏனெனில், நற்பண்புகள் இல்லாத சமூகம் தோல்வி மற்றும் அழிவுகளையே சந்தித்து வருவதை வரலாற்றில் காண முடிகிறது. இதன் ஆபத்தான விளைவுகள் மனிதனை மட்டுமன்றி, ஏனைய படைப்பினங்களையும் பாதிப்பிற்குள்ளாக்குவதைப் பார்க்கின்றோம். மனிதர்கள் நற்பண்புகளைக் கற்றுக் கொள்ள இறை வழிகாட்டல் அவசியமாகும். அத்துடன் கல்வி அவன் வாழும் சூழல், சமூகப் பழக்க வழக்கங்கள் போன்றனவும் துணை செய்கின்றன.

இஸ்லாம் கூறும் நற்பண்புகளுள் நம்பிக்கை நாணயம் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு மனிதனிடமும் நேர்மை, வாய்மை, அமானிதங்களைப் பேணல் போன்ற முக்கிய பண்புகள் இருப்பது அவசியமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது சிறு பராயத்திலிருந்தே நம்பிக்கை, நாணயம் பேணல் போன்ற பண்புகளில் அதி சிறந்து விளங்கினார்கள். அதனாலேயே, அவர்கள் **அஸ்ஸாதிக், அல்அமீன்** (உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர்) என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

நம்பிக்கை நாணயத்தின் வெளிப்பாடாகிய வாய்மை, வாக்குறுதி மாறாமை பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு வலியுறுத்துகின்றது:

وَأَوْفُوا بِالْعَهْدِ إِنَّ الْعَهْدَ كَانَ مَسْئُولًا

***''மேலும், வாக்குறுதியை நீங்கள் முழுமையாக நிறைவேற்றுங்கள். ஏனெனில் நிச்சயமாக வாக்குறுதி பற்றி மறுமையில் விசாரிக்கப்படும்.'' (17 : 34)***

அவ்வாறே மற்றுமோர் இடத்தில்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُواْ أَوْفُواْ بِالْعُقُودِ

***''விசுவாசிகளே நீங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளைப் பூரணமாக நிறைவேற்றுங்கள்'' (5:1)*** எனக் குறிப்பிடுகின்றது.

காலவோட்டத்தில் இப்பண்புகளைப் பேணுவதில் மனிதனின் நிலை பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறும்போது:

''நிச்சயமாக உங்களுக்குப் பின் ஒரு சமுதாயத்தினர் (வர) இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை மோசடி செய்வார்கள். அவர்களிடம் எதையும் நம்பி ஒப்படைக்கப்படாது. அவர்கள் சாட்சியாக இருக்கத் தாமாகவே முன் வருவார்கள். ஆனால், சாட்சியம் அளிக்கும் படி அவர்களை யாரும் கேட்க மாட்டார்கள். அவர்கள் நேர்ச்சை செய்வார்கள். ஆனால், அதை நிறைவேற்ற மாட்டார்கள்'' எனக் குறிப்பிட்டார்கள். (புகாரி)

நம்பிக்கை நாணயம் பேணுவதன் மூலம் தனி நபர், குடும்பம், சமூகம் என அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் பரஸ்பர ஒற்றுமையும் இறுக்கமான பிணைப்பும் ஏற்பட்டு சகவாழ்வு செழித்தோங்குகின்றது. கூட்டுச் சேர்ந்து நடத்தப்படும் வர்த்தக நடவடிக்கைகள் வெற்றியளிக்கின்றன. அதேநேரம் கூட்டு சேர்ந்தவர்கள் தங்களுக்கிடையில் நம்பிக்கை நாணயம் பேணாது ஏனைய பங்குதாரர்களுக்கு மோசடி செய்வதன் மூலம் கூட்டு முயற்சியாண்மை தோல்வியில் முடிவதைப் பார்க்கிறோம்.

அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: ''கூட்டு முயற்சியில் ஈடுபடும் ஒருவர் தன்னுடைய தோழருக்கு மோசடி செய்யாதவரை நான் அவர்களுடன் மூன்றாவது பங்காளியாய் இருப்பேன். ஆனால், அவர்களிலொருவர் மற்றவருக்கு மோசடி செய்ய ஆரம்பித்து விட்டால் அவ்விருவரை விட்டும் நான் வெளியேறி விடுகிறேன். (அபூதாவூத்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''மோசடி செய்பவனுக்கு மறுமை நாளில் (அவனுடைய மோசடியை வெளிச்சமிட்டுக் காட்டும் முகமாக அடையாளக்) கொடி ஒன்று நாட்டப்பட்டு இது இன்னாருடைய மகன் இன்னாரின் மோசடி (யைக் குறிக்கும் கொடி)'' என்று கூறப்படும்.'' (புகாரி)

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சந்தையில் ஓர் உணவுக் குவியலைக் கண்டு அதனுள் தனது கையை விட்டார்கள். அவர்களுடைய

விரல்களில் ஈரம் பட்டது. அந்த வியாபாரியைப் விழித்து, ‘‘இது என்ன?’’ என்று கேட்டார்கள். அதற்கு அவர் ‘‘அல்லாஹ்வின் தூதரே! மழை நீர் இதில் விழுந்து விட்டது’’ என்று கூறினார். அதற்கு அவர்கள் ‘‘மக்களுக்குத் தெரியும் வண்ணம் அதை வைத்திருக்க வேண்டாமா?’’ எனக் கேட்டுவிட்டு, ‘‘யார் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்லர்’’ என்று கூறினார்கள். (முஸ்லிம்)

**எனவே, நம்பிக்கை நாணயம் மிக்கவர்களாக, அமானிதங்களை ஒழுங்காகப் பேணி இறை கட்டளையின் படியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் வாழ்வை அமைத்துக் கொள்ள முயற்சிப்போம்.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

الْأَمِيْنُ   الصَّادِقُ

### பயிற்சி

1. நம்பிக்கை நாணயம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
2. வாக்குறுதி நிறைவேற்றலை வலியுறுத்தும் அல் குர்ஆன் வசனம் ஒன்றைக் குறிப்பிடுக.
3. மோசடியில் ஈடுபடக் கூடாதென்பதற்கு ஓர் உதாரணம் தருக.
4. உமக்குத் தெரிந்த நம்பிக்கை நாணயத்தை வெளிப்படுத்தும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுக.